சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 24.10.2018

சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, ஹேவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 07–ம் நாள் (அக்டோபர் திங்கள் 24–ம் நாள்:–24.10.2018) புதன் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.1**

இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கை பணிகளில் நிலவேம்பு குடிநீர் வழங்கும் பணி தற்சமயம் மழை காலம் என்பதால் தொடர்ந்து பொது மக்களுக்கும், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கும் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் நிலவேம்பு பொடி இருப்பில் இல்லாத காரணத்தினால் தற்போது 100 கிலோ நிலவேம்பு பொடி வாங்க ஆகும் செலவினம் ரூ.2,00,000/—க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. பொது சுகாதார டெங்கு தடுப்பு நடவடிக்கை பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.5653/2018/எச்1)** |
| **தீர்மான எண், நாள்** | **494, நாள்.24.10.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.2**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 கீழப்பூலானந்தபுரம் கருப்பையா தெருவில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் அமைக்கும் பணிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் திருமதி.ப.பூபதி, க/பெ.பரமசிவம், கீழப்பூலானந்தபுரம் என்பவரால் தொடர்ந்த வழக்கு WP (MD) No.21053 of 2018க்கு எதிராக வாதாட வழக்கறிஞர் கட்டணம் தொகை ரூபாய் 7500/— அரசு வழக்கறிஞர் திரு.எம்.கருப்பசாமி பாண்டியன் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **1. மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1888/2018/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **495, நாள்.24.10.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.3**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்மான புதிய பேருந்து நிலையத்தில் உள்ள மின் கோபுர விளக்கு அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூபாய்.720000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.5646/2018/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **496, நாள்.24.10.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.4**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பள்ளிக்கோட்டை பட்டி அங்கன்வாடி மையத்தில் மேற்கூரை மாற்றி புதிய RCC அமைக்கும் பணி, காந்தி நகர் காலனி மற்றும் வாட்டர் டேங்க் அருகில் உள்ள அங்கன்வாடி மையத்தில் சுற்றுச் சுவர் மற்றும் Fencing அமைக்கும் பணி மற்றும் கல்யாண மண்டபம் பள்ளியில் உள்ள தரைதளம், மின் இணைப்பு, கழிவறை கதவுகள் அமைக்க ஆகும் மொத்த செலவினம் தொகை ரூபாய்.4.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்படி செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.1937/2018/இ1)** |
| **தீர்மான எண், நாள்** | **497, நாள்.24.10.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.5**

சின்னமனூர் நகராட்சிக்கு 2017–2018ஆம் ஆண்டிற்கான உட்கட்டமைப்பு இடைவெளி நிரப்பு நிதியின் கீழ் ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில், நகராட்சிக்குட்பட்ட சாமிகுளத்தில் நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் துப்புரவு பணியாளர் குடியிருப்பு கட்டும் பணிக்கு, ஒப்பந்தப்புள்ளி நடைமுறைகள் அனைத்தும் முறையாக பின்பற்றப்பட்டு, திரு.பெ.சிவசாமி என்ற ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டு, மேற்படி பணி கூரை மட்டம் (Roof Level) பணி முடிவடையும் உள்ள நிலையில், எதிர்பாராதவிதமாக ஒப்பந்தக்காரர் திரு.பெ.சிவசாமி அவர்கள் கடந்த 16.09.2018ம் அன்று மரணமடைந்து விட்டார்.

எனவே மேற்படி பணியினை திரு.பெ.சிவசாமி என்பவரது மகள் திரு.சி.சிவசௌமியா என்பவர் தொடர்ந்து மேற்கொண்டு, பணியினை முடித்து தருவதற்கு அனுமதி வழங்குமாறு, திரு.பெ.சிவசாமி அவர்களின்மனைவி திருமதி.சி.கவிதா விண்ணப்பம் செய்துள்ளார். ஆனால் பொதுப்பணித் துறை ஒப்பந்த விதிகளின்படி மேற்படி பணியினை தொடர்ந்து செய்து முடிக்க, அன்னாரின் மகளை அனுமதிக்க விதிகளில் வழிவகை இல்லாததால், ஒப்பந்தக்காரர் இறக்கும் வரை, செய்து முடித்த பணிக்கான தொகையினை அன்னாரின் வாரிசுக்கும் விதிகளின்படி வழங்கிவிட்டு, ஒப்பந்தக்காரர் திரு.பெ.சிவசாமி அவர்களுக்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவினை இரத்து செய்து விட்டு, எஞ்சிய பணியினை மேற்கொள்ள புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோரி, மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. திரு.பெ.சிவசாமி ஒப்பந்தக்காரர் மேற்கொண்டு முடிக்கப்பட்டுள்ள பணியினை அளவீடு செய்து, வழங்கியுள்ள தொகை போக எஞ்சிய தொகையினை வாரிசு சான்று பெற்று, வாரிசுதாரருக்கு வழங்கலாம்.**<br>**2. திரு.பெ.சிவசாமி ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்ட வேலை உத்திரவினை இரத்து செய்யலாம்.**<br>**3. எஞ்சியுள்ள பணியினை அளவீடு செய்து, புதிதாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரி செய்து முடிக்க அனுமதிக்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **498, நாள்.24.10.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.6**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற திட்டப்பணிகளை தினதந்தி திண்டுக்கல் தொழில் மலர் 2018–இல் பிரசுரம் செய்தமைக்கு தொகை ரூபாய்.23678/– தினதந்தி நாளிதழ், திண்டுக்கல் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5649/2018/இ1)**
**தீர்மான எண், நாள்** **499, நாள்.24.10.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.7**

சின்னமனூர் நகராட்சியில் அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு (குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ள குடியிருப்புகள் போக எஞ்சிய குடியிருப்புகளுக்கு) UIDSSMT திட்டத்தின் சுழல் நிதியின் கீழ் (Under Revolving Fund of UIDSSMT) TUFIDCO நிறுவனத்தில் கடன் பெற்று "வீட்டு குடிநீர் குழாய் இணைப்பிற்கான உட்புற குழாய் இணைப்புப் பணி மேற்கொள்ளுதல்" (Provision of Internal Plumping for House Service Connection) என்ற அடிப்படையில் நகரில் 2750 குழாய் இணைப்புகள் வழங்கும் பணிக்கு திட்ட மதிப்பீடாக ரூ.96.40 இலட்சம், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாட்டு கழகத்தால் (TUFIDCO) ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதில் ரூ.83.46 இலட்சம் வட்டியில்லா கடனாகவும், (Interest Free Loan) எஞ்சிய தொகை ரூ.12.94 இலட்சத்தினை சரக்கு மற்றும் சேவை வரி மற்றும் இதர தவிர்க்கவியலாத இனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் வரிகளின் மூலம் (GST and Other Mandatory Provisions) நகராட்சியே ஈடு செய்து கொள்ள சென்னை, டூஃபிட்கோ நிறுவனத்தின் கடன் அனுமதி கடித எண்.TUFIDCO/URF/18–19–33 ULBs/AM(M)/2018–இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி வட்டியில்லா கடன் மூலம் விடுவிக்கப்படும் தொகை ரூ.83.46 இலட்சம் போக எஞ்சிய தொகை ரூ.12.94 இலட்சத்தினை டூஃபிட்கோ நிறுவனம் அறிவுறுத்தியுள்ளவாறு நகராட்சியின் பொது நிதியிலிருந்து ஈடு செய்யவும், மேற்படி திட்டப்பணிக்கு தனியாக ஒரு வங்கி கணக்கு துவக்கி பராமரிக்கவும், வட்டியில்லா கடனை டூஃபிட்கோ நிறுவனத்திற்கு திருப்பி செலுத்தும் வரை (Escrow) எஸ்க்ரோ வங்கி கணக்கு ஒன்றினை தனியாக துவக்கி, மேற்படி கணக்கு வழியாக அனைத்து வருவாய்களையும் பராமரிக்கவும், மும்முனை ஒப்பந்தம் ஒன்று தயார் செய்து (எஸ்க்ரோ கணக்கு துவக்கப்படும் வங்கி, டூஃபிட்கோ நிறுவனம் மற்றும் நகராட்சி) சமர்ப்பிக்கவும், மேற்படி வட்டியில்லா கடன் பெறுவதற்கு டூஃபிட்கோ நிறுவனம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு நகராட்சி சார்பாக ஆணையர் ஒப்புதல் செய்யவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.0123/2018/இ2)**
**தீர்மான எண், நாள்** **500, நாள்.24.10.2018**
**தீர்மானம்**

*******

**பொருள் எண்.8**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desilting வாகனம் எண்.TN60Q4981க்கு **26.10.2018**ம் தேதியோடு வருடாந்திர காப்பீட்டுத் தொகை காலம் முடிவடைந்துவிட்டது. எனவே **26.10.2018** முதல் **25.10.2019** வரை உள்ள ஒரு வருட காலத்திற்கான வருடாந்திர காப்பீட்டுத் தொகை ரூ.**10047/–** யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு செலுத்த நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3245/2017/இ2).** |
| **தீர்மான எண், நாள்** | **501, நாள்.24.10.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.9**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் Desilting வாகனம் எண்.TN60Q**4963**க்கு **26.10.2018**ம் தேதியோடு ஒரு வருட காலத்திற்கான வருடாந்திர காப்பீட்டுக் காலம் முடிவடைந்துவிட்டபடியால், **26.10.2018** முதல் **25.10.2019** வரை உள்ள ஒரு வருட காலத்திற்கான வருடாந்திர காப்பீட்டு தொகை ரூ.**10163/–**யை யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்வதை ஏற்கலாம். (ந.க.எண்.3462/2017/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **502, நாள்.24.10.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.10**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகளாக கொசு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் கொசு புகையடிப்பான் (Fogging Machine) கருவிகள் பழுதடைந்துள்ளதால் பணிகள் தொய்வடையும் நிலையில் உள்ளதால் பழுதடைந்துள்ள Puls Fog Machine-2, Vehicle Mounted Fog Machine-1 மட்டும் மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.**90000/–**க்கு நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.5098/2018/எச்1ச்** |
| **தீர்மான எண், நாள்** | **503, நாள்.24.10.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.11**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் அனைத்து வீடுகளுக்கும் கழிப்பிடம் கட்டும் (IHHL) திட்டத்தின் கீழ் கழிப்பிடம் கட்டும் பணியினை விரைந்து முடித்து இலக்கினை அடையும் விதமாக நகராட்சி பகுதிகளில் உள்ள 50 பின்தங்கிய பயனாளிகளுக்கு உதவும் வகையில் மேற்கண்ட கழிப்பிடம் கட்ட தேவையான பேசன், PVC பைப்புகள் மற்றும் கதவுகளை CSR நிதியிலிருந்து வாங்கி கொடுத்தால் மேற்கண்ட பயனாளிகள் பயன்பெறுவர். மேலும் கழிப்பிடம் கட்டும் பணியும் விரைந்து முடியும். ஏனவே மேற்கண்ட பொருட்கள் வாங்க விலைப்புள்ளி அறிவிப்பு வெளியிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.**<br>**2. மேற்கண்ட பொருட்கள் வாங்க ஆகும் செலவினத்தை CSR நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம். (ந.க.எண்.1238/2015/எச்1).** |
| **தீர்மான எண், நாள்** | **504, நாள்.24.10.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.12**

Resolved that Chinnamanur Municipality is authorizing the authorized signatory to borrow the interest free loan of Rs.83.46 Lakh (Rupees Eighty three lakh and forty six thousand only) from TUFIDCO for "Providing of Internal Plumping for HSC (Minimum 2750 Nos) for making optimum utilization of Water Supply at Chinnamanur Municipality" Under Revolving fund of UIDSSMT as per the terms and conditions prescribed by TUFIDCO.

The authorized signatory be and hereby authorized to execute the loan agreement and other documents if any with TUFIDCO and complete all the other formalities including affixing of the common seal of Chinnamanur Municipality on the documents to be executed with TUFIDCO on behalf of Commissioner, Chinnamanur Municipality.

Resolved to repay the interest free loan as per the repayment schedule in the agreement.

Resolved to adhere to time line as envisaged DPR.

Resolved that Chinnamanur Municipality is authorizing the authorized signatory to make necessary budgetary provisions in Chinnamanur Municipality annual budget for the repayment of principal for the project proposals to TUFIDCO and is hereby confirmed that all dues will be paid in time without default for creating sustainable revolving fund.

Resolved that Chinnamanur Municipality is authorizing the authorized signatory to open and operate an ESCROW account for Water Supply in favour of TUFIDCO till the repayment of loan.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:–** | **1. மன்றம் அனுமதிக்கலாம்.** |
| **தீர்மான எண், நாள்** | **505, நாள்.24.10.2018** |
| **தீர்மானம்** | |

*******

## பொருள் எண்.13

சின்னமனூர் நகராட்சியில் 2017–2018 ஆம் ஆண்டிற்கு தணிக்கைக்கு சொத்துவரி, காலியிட வரி மற்றும் தொழில்வரி வசூல் செய்த விவரங்களை பிரிண்ட் எடுத்து, ஸ்பைரல் பைண்டிங் செய்து வழங்கியமைக்கு ரூ.4300/– மட்டும் செலவு செய்யப்பட்டுள்ளது என்று இந்நகராட்சி வருவாய் ஆய்வர் திரு.செ.முருகன் அவர்கள் பட்டியல் சமர்ப்பித்துள்ளார். அத்தொகையினை தனக்கு வழங்கக் கோரியுள்ளார்.

எனவே, மேற்படி தொகையினை இந்நகராட்சி வருவாய் ஆய்வர் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.5856/2008/அ1).**

**தீர்மான எண், நாள்** **506, நாள்.24.10.2018**
**தீர்மானம்**

*******

## பொருள் எண்.14

இந்நகராட்சிக்குச் சொந்தமான நேருஜி பேருந்து நிலையத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேருந்து நிலைய கடைகள், உணவகம் மற்றும் கட்டணக் கழிப்பறைகளை நகர்மன்றத் தீர்மான எண்.665, நாள்.18.07.2016 மற்றும் தரவாடகை அடிப்படையில் இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம், நகர்மன்ற தீர்மான எண்.484, நாள்.28.09.2018ன்படி, ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டு காலத்திற்கு நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஒப்படைக்க முன் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 18 கடைகள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் ஆகியவற்றினை 24.10.2018ம் தேதி மறு முன் பொது ஏலத்துடன் கூடிய ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற கீழ்கண்ட விவரப்படியான ஒப்பந்தப்புள்ளி விவரம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | கடை எண் | ஏலதாரர் / ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஆண்டு குத்தகை) |
|---|---|---|---|
| 1 | 10 | ஆர்.அழகுமுருகன், த/பெ.ராஜேந்திரன், வார்டு எண்.2, கிழக்குத் தெரு, சீலையம்பட்டி போஸ்ட், தேனி மாவட்டம். | ரூ.2250/– |
| | | கே.மதன்குமார், த/பெ.ஆர்.கனகராஜ், வார்டு எண்.5, கந்தசாமி செட்டியார் தெரு சீலையம்பட்டி போஸ்ட், தேனி மாவட்டம். | ரூ.2000/– |
| 2 | இரு சக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டண வசூல் செய்யும் உரிமம் | ப.சங்கீதா, க/பெ.ஆர்.பரமானந்தன், 2/231, கிழக்குத் தெரு, முத்துலாபுரம் | ரூ.50333/– |
| | | ப.நாகராஜ், த/பெ.பாலசுப்பிரமணியன், 18, எஸ்.பி.கே.ரோடு, கே.கே.குளம், சின்னமனூர் | ரூ.21000/– |

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | **1. 24.10.2018ம் நாள் நடைபெற்ற 18 கடைகள் மற்றும் இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் மறுமுன் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 1 கடைக்கு மட்டுமே வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி கோர முன்வந்துள்ளனர். இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கும் ஒப்பந்தப்புள்ளி கோர முன் வந்துள்ளனர். இதர இனங்களுக்கு எவரும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோர முன்வரவில்லை.**<br>**2. மேற்கண்ட வரிசை எண்.1 ஒரு கடைக்கு மட்டும் வைப்புத் தொகை செலுத்தி ஒப்பந்தப்புள்ளி மட்டும் கொடுத்துள்ளனர். எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. மேற்படி கடைகளுக்கு கொடுத்துள்ள உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம். வரிசை எண்.2, மேற்படி இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு கொடுத்துள்ள உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்றுக் கொள்ளலாம். (ந.க.எண்.370/2017/அ2).** |
| **தீர்மான எண், நாள்** | **507, நாள்.24.10.2018** |
| **தீர்மானம்** | |

*******

**பொருள் எண்.15**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ், வீடு வீடாக சென்று குப்பைகளை பிரித்து வாங்கி சேகரிக்கவும், சேகரிக்கப்பட்ட குப்பைகளை உரக்கிடங்கில் கொண்டு சென்று சேர்த்தல், மக்கும் குப்பைகளிலிருந்து உரம் தயாரித்தல், சாக்கடை சுத்தப்படுத்தும் பணிகளுக்கு தற்போது 115 துப்புரவு பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். மேற்கண்ட பணிகளை முழுமையாக மேற்கொள்ள போதுமான துப்ரபவு பணியாளர்கள் இல்லாததால் துப்புரவு பணிகளை சரிவர செய்ய இயலவில்லை. மேலும் நகரிலுள்ள வீடுகளின் எண்ணிக்கை, மக்கள் தொகை அதிகரிப்பு மற்றும் நகர விஸ்தரிப்பு காரணமாக குறைந்த அளவே துப்புரவு பணியாளர்கள் உள்ளதால் பணியினை செய்ய இயலவில்லை. நகரில் உள்ள குடியிருப்புகளின்படி அரசாணை எண்.101, நாள்.30.04.1997–இல் நிர்ணயிக்கப்பட்ட அளவீட்டின்படி தனியார் மூலம் கீழ்க்கண்டவாறு பற்றாக்குறை துப்புரவு பணியாளர்கள் நியமனம் செய்யலாம். மேற்கண்ட செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள கருத்துரு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**<u>அரசாணை 101/97 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.30.04.1997ன்படி தேவையான துப்புரவு பணியாளர்கள்.</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 250 குடியிருப்புகளுக்கு 3 பேர் | – | 12511/250x3 | = | 150 பேர் |
| 2. | 1 டிப்பர் லாரிக்கு (பெரியது )தலா 4 பேர் வீதம் | – | 1x4 | = | 4 பேர் |
| 3. | 2 டம்பர் பிளேசர் லாரிக்கு 1 நபர் வீதம் | – | 2x1 | = | 2 பேர் |
| 4. | டிராக்டர் 1க்கு 3 நபர் வீதம் | – | 1 x3 | = | 3 பேர் |
| 5. | கலவை உரக்கிடங்கு 30 மெ.டன் வரை 2 பேர் | – | | = | 2 பேர் |
| 6. | சி வகுப்பு பேருந்து நிலைய வளாக துப்புரவு பணிக்கு | – | | = | 2 பேர் |

| | | | |
|---|---|---|---|
| 7. | பேருந்து நிலைய கழிப்பிடம் | = | 1 பேர் |
| | **மொத்த பணியாளர்கள்** | **=** | **164 பேர்** |

தற்போதைய அனுமதிக்கப்பட்ட பணியாளர்களின் விவரம் – 82 பேர்

**<u>101/97 அரசாணையின்படி தேவையான பணியாளர்கள் விவரம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | தற்போது தேவையான துப்புரவு பணியாளர்கள் | – 164 பேர் |
| 2. | தற்போது பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் (ULB) | – 65 பேர் |
| 3. | ஒப்பந்தப் பணியாளர்கள்<br>CMA Roc No.21085/F3/2016, நாள்.31.08.2016 | – 50 பேர் |
| 4. | பற்றாக்குறை பணியாளர்கள் | – 49 பேர் |

மேற்கண்ட அரசாணையின்படி கூடுதலாக 49 துப்புரவு பணியாளர்கள் இருந்தால் மட்டுமே திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் 2016 சிறப்பாக செயல்படுத்த முடியும் என்பதால் இன்றைய சூழ்நிலைக்கு தேவையான 49 துப்புரவு பணியாளர்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நிர்ணயிக்கும் ஊதிய விகிதத்தில் தனியார் மூலம் பணி அமர்த்தி துப்புரவு பணிகள் மேற்கொள்ள உரிய அனுமதி வேண்டி மன்றத்தில் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**2. மேற்கண்ட பொருள் தொடர்பாக சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4998/2018/எச்1)**

**தீர்மான எண், நாள்** **508, நாள்.24.10.2018**
**தீர்மானம்**

*******